# யூன் – 18- பொதுக்கால 11ம் வார ஞாயிறு

## ஆண்டவரின் திரு உடல் திரு இரத்தம் - பெரு விழா

**“மானிடமகனின் சதையை உண்டு என் இரத்ததை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்.” (யோவான்.6:53)**

## முதல் வாசகம் : இணைச்சட்டம் 8 : 2 – 3,14 - 16

உங்கள் கடவுளாகிய ஆண்டவர் பாலைநிலத்தில் உங்களைக் கூட்டிச் சென்ற எல்லா வழிகளையும் நினைவில் கொள்ளுங்கள். அதன்மூலமே அவர் உங்களை எளியவராக்கினார். அவர்தம் கட்டளைகளை நீங்கள் கடைப்பிடிப்பீர்களோ மாட்டீர்களோ என உங்கள் உள்ளச் சிந்தனையை அறிந்து கொள்ளவும் சோதித்தார். அவர் உங்களை எளியவராக்கினார். உங்களுக்குப் பசியைத் தந்தார். ஆனால், மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் உயிர்வாழ்கின்றார் என்று நீங்கள் தெரிந்துகொள்ளுமாறு, நீங்களும் உங்கள் மூதாதையரும் அறிந்திராத மன்னாவினால் உங்களை உண்பித்தார். நீங்கள் நெஞ்சில் செருக்குற்று, அடிமைத்தனத்தின் வீடாகிய எகிப்து நாட்டிலிருந்து உங்களைக் கூட்டி வந்த உங்கள் கடவுளாகிய ஆண்டவரை மறந்துவிட வேண்டாம். அவரே, கொள்ளிவாய்ப் பாம்புகளும் தேள்களும் நிறைந்த, நீரற்று வறண்ட நிலமான பரந்த கொடிய பாலைநிலத்தில் உங்களை வழி நடத்தியவர் இறுகிய பாறையிலிருந்து உங்களுக்காக நீரைப் புறப்படச் செய்தவர். உங்கள் மூதாதையருக்குத் தெரிந்திராத மன்னாவால் பாலைநிலத்தில் உங்களை உண்பித்தவர் இறுதியில் உங்களுக்கு நல்லது செய்வதற்காக உங்களை எளியவராக்கிச் சிறுமைப்படுத்திச் சோதித்தவரும் அவரே.

**பதில்பாடல் :** ஜெருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக

## இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 10 : 16 – 17

சகோதர சகோதரிகளே! கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா! அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம்.

## நற்செய்தி : யோவான் 6 : 51 – 58

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்.” ”நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படிக் கொடுக்க இயலும்?” என்ற வாக்குவாதம் அவர்களிடையே எழுந்தது. இயேசு அவர்களிடம், ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் மானிடமகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள். எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை உண்மையான உணவு. எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர். உண்பவரை என்றும் வாழச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த இந்த உணவே. இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்து போனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்” என்றார்.

**தியானம்:** இயேசுவின் திரு உடல் திரு இரத்தக் கொண்டாட்டம் வெறும் சடங்கல்ல, மாறாக எம் அனைவரையும் ஒரே உடலின் உறுப்புக்களாக வாழ அழைக்கும் பெருவிழா. கல்வாரியில் கழுமரத்தில் சிந்திய விலைமதிக்க முடியாத திரு இரத்தத்தால் நாம் அனைவரும் பாவத்தில் இருந்து விடுதலை அடைந்துள்ளோம் என்பது எமது விசுவாசம். இறைவன் இஸ்ரவேலரைக் கைவிடவில்லை என்பதனை மன்னாவை அவர்களுக்கு அளித்து வெளிப்படுத்தினார். அதன் ஆழமான அர்த்தமும் நோக்கமும் நேர்மையான ஒரே விசுவாசத்தை ஏற்படுத்துவதே. ஆகவேதான் “மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றினாலும் உயிர்வாழ்கின்றனர்” என மோசே தம் மக்களுக்கு கூறினார். நற்செய்தியில் இயேசு “மானிட மகனின் சதையை உண்டு என் இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்” (யோவா.6:53) என்கின்றார். அதுவே ஜீவ அப்பமாகிய அவரது உடல், இயேசு குறிப்பிடும் இரத்தம் அவரது மரணத்திலிருந்து ஊற்றெடுத்து வரும் புதுவாழ்வு. அப்பமும் இரசமுமாக நாம் பெற்றுக் கொள்வது. மறைபொருளான அவரது மகிமைக்குரிய திரு உடலும் திரு இரத்தமும் என்பதை மறத்தலாகாது. உலகம் முடியும் வரை உங்களோடு இருக்கின்றேன். என்ற இயேசுவின் பிரசன்னம் அப்பத்தின் வடிவாகி இருக்கும் நற்கருணையில் இருக்கின்றது. இயேசுவின் திரு உடலை திருப்பலியில் பெறும் பொழுது அவராகவே மாறுகிறோம். ஆகவே அவரது இயல்பு எமது வாழ்வில் அடையாளங்களாக அன்பு, பகிர்வு, பொறுமை, என்பனவற்றால் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனவே வாழ்வுதரும் உணவை உண்டு இயேசுவை நமதாக்கி நிறைவாழ்வைப் பெறுவோம்.